**MCOP NO:2929/2021 DATE:26.06.2024**

ம.சா.1

பெயா்.சித்ரா

க/பெ.திரு.சுரேஷ்

வயது. 53

**<u>முதல் விசாரணை</u>**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் ஏற்கனவே தாக்கல் செய்துள்ளேன். தற்போது என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 16 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிா்மனுதாரா் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நோில் பாா்க்கவில்லை. மசாஆ1 விபத்து பதிவேட்டில் என் கணவா் குடித்துவிட்டு வாகனம் ஒட்டியதாக குறிப்பு உள்ளது என்றால் அதுபற்றி தொியாது. என் கணவா் குடிக்கவில்லை. என் கணவா் குடிபோதையில் சைக்கிள் ஒட்டி சென்றதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சாியல்ல. குற்ற இறுதி அறிக்கை, மாதிாி வரைபடம், மோட்டாா் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சாிதான். தொழில், வருமானம், வருமான இழப்பு குறித்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சாிதான். விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பாலிசி நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மனுவில் கூறி உள்ள பாலிசி எங்களுடைய நிறுவனத்தில் வழங்கபடவில்லை என்றும், அது வழக்கிற்காக போலியாக வழங்கபட்ட எண் என்றும், சொன்னால் அதுபற்றி தொியாது. ஏதேனும் இழப்பீடு கிடைக்க வேண்டும் என்றால் 1ம் எதிா்மனுதாரா் மட்டுமே வழங்க வேண்டும் என்றால் சாியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**X**

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவா் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.